
# கிறிஸ்தவ கருத்தாடல் – 2015



## "பணிக்காய் பயணிப்போம்"



**கிறிஸ்தவ மன்றம்**

**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி**

**07.11.2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Nersha Mariyanayagam - pillai

“பணிக்காய் பயணிப்போம்”

# கிறிஸ்தவ கருத்தாடல் - 2015



**07.11.2015**

**கிறிஸ்தவ மன்றம்**

**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சிகை விபரங்கள்


| | |
|---|---|
| சஞ்சிகை | :- கிறிஸ்தவ கருத்தாடல் மலர் |
| வெளியீடு | :- கிறிஸ்தவ கருத்தாடல் மலர்க்குழு 2015<br>வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி |
| பதிப்பு ஆண்டு | :- 2015 |
| பக்க அளவு | :- A5 |
| வழிகாட்டலும் ஆலோசனையும் | :- திரு கு.சிதம்பரநாதன் - பீடாதிபதி<br>அருட்பணி.ஜே.லெபோண் சுதன் அ.ம.தி |
| மலரக் குழு | :- திரு.மி சூசைதாசன்<br>(காப்பாளர்- கிறிஸ்தவ மன்றம்)<br>திருமதி.நெ. அன்ரனி குரூஸ்<br>(ஆலோசகர்- கிறிஸ்தவ மன்றம்)<br>திரு.எஸ் பற்றிக் ஜெராட்<br>(ஆலோசகர்- கிறிஸ்தவ மன்றம்)<br>அருட் சகோதரி. ஜெனிற்றா (O.L.E)<br>செல்வி .நேர்சா<br>செல்வி த.அனோஜிதா |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மன்னார் மறை மாவட்ட ஆயர் அவர்களின் ஆசிச் செய்தி

இறைசாட்சியாக வாழ்வதென்பது இயேசுவின் இலட்சியத்தை யதார்த்தமாக்குவதே. அதாவது வாழும் சமூகத்தில் வாழும் நிலைகளில் இருந்து கொண்டு சமகால சங்கடங்களை துணிவுடனும் நம்பிக்கையுடனும் சந்தித்து புதிய சமூக உருவாக்க பயணத்தில் ஈடுபடுவதே ஒரு நற் கிறிஸ்தவனின் உயர்ந்த பணி. இந்த சிந்தனைகளை சிரமேற் கொண்டு இந்த அர்ப்பண ஆண்டில் "பணிக்காய் பயணிப்போம்" என்ற கருப்பொருளில் தமது வருடாந்த கிறிஸ்தவ கருத்தாடல் நிகழ்வை நடாத்த முன்வந்திருக்கும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி கிறிஸ்தவ ஒன்றியத்தினரை வாழ்த்தி பாராட்டுகிறேன்.காலத்தின் கண்ணாடிகளாய் துலங்கும் ஆசிரிய சமூகத்தில் தம்மையும் இணைத்து வெவ்வேறு முயற்சிகளில் தம்மை ஈடுபடுத்தி ஆரோக்கியமான சமூக உருவாக்கலில் தம்மையும் ஆளுமைப்படுத்தும் இம்மாணவ ஆசிரியர்களின் முயற்சிகளை வரவேற்கின்றேன். இவர்களின் எதிர்கால நல் இலட்சியங்கள் கைகூட ஆசிக்கின்றேன்.

துறவற வாழ்வு என்பது வாழ்வை துறப்பதல்ல மாறாக செய்யும் செயலின் பலனை துறப்பதே. தன்னை மறந்து துன்பங்களை ஏற்று அதிகாரத்தாகமோ, அதிகாரத்தாக்கமோ இன்றி எல்லோரும் சமம் என்று வாழ்ந்த இயேசு ஆண்டவரைப் பின்பற்றி இல்லற துறவற நிலைகளில் வாழும் ஒவ்வொருவரும் தமது நிலைகளிலேயே இறைவனின் சித்தத்தை நிறைவேற்ற அர்பணிக்கப்பட்டவர்கள் என்ற உண்மையை உணர்ந்து வாழ வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். எனவே அனைவருக்கும் உரித்தான அர்ப்பணப் பயணத்தில் வேட்கையோடும் விருப்போடும் உறுதியுடனும் பயணித்து புரையோடிய சமூகத்திற்கு புத்துயிர் அளிக்கும் கருவிகளாய் யாவரும் செயற்பட இந்நாளில் ஆசீர் வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

**அன்புடன்,**

**மேதகு. இராயப்பு யோசேப்பு,**

**மன்னார் மறைமாவட்ட ஆயர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ் மறை மாவட்ட ஆயர் அவர்களின் ஆசிச் செய்தி

"நீங்கள் பெற்றுக்கொண்ட அழைப்புக்கேற்ப வாழுங்கள், முழு மனத் தாழ்மையோடும், கனிவோடும், பொறுமையோடும் ஒருவரை ஒருவர் அன்புடன் தாங்கி அமைதியுடன் இணைந்து வாழ்ந்து தூய ஆவி அருளும் ஒருமைப்பாட்டை காத்துக் கொள்ள முழு முயற்சி செய்யுங்கள்" (எபே. 4:2-3)

"பணிக்காய் பயணிப்போம்" எனும் பொருள் பூத்த சிந்தனையில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றத்தின் அர்ப்பண ஆண்டிற்கான கிறிஸ்தவ கருத்தாடலுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். கல்வியும் ஒழுக்கமும் உடன் ஆன்மீகமும் ஒன்றாய் கலந்து உயிரூட்டமுள்ள,அர்ப்பணிப்புள்ள புதிய சமுதாயம் மலரச் செய்யும் பணியில் பணிவிடை வழித்தடங்களில் நாமும் பணிபுரிய முன்வர வேண்டும்.

காலத்தால் அழியாத கல்வியையும் அணையாத தாகமும், வாஞ்சையும் உள்ள புதிய இளம் கல்வியியலாளர்கள் எம் சமூகத்தில் மலரவும், எம் கல்விச் சமூகம் சீருடனும் சிறப்புடனும் வான்நோக்கி வளர்ந்தோங்கவும் வாழ்த்தி இறையாசி கூறி நிற்கின்றேன்.

**மேதகு இ. தோமஸ் சௌந்தரநாயகம்,**
**யாழ் ஆயர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருகோணமலை மறை மாவட்ட ஆயர் அவர்களின் ஆசிச் செய்தி

வவுனியா கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ மாணவர்களால் வருடாவருடம் ஒழுங்கு செய்யப்படுகின்ற சிறப்பு நிகழ்வுகளின் முக்கிய அம்சமாக நடைபெறும் கிறிஸ்தவ கருத்தாடலுக்கு ஆசிச் செய்தி அனுப்புவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

கத்தோலிக்க திருச்சபையின் இவ்வருட மையப் பொருளான அர்ப்பண வாழ்விற்கான ஆண்டை இலக்காகக் கொண்டு "பணிக்காய் பயணிப்போம்" எனும் தலைப்பில் சிறப்பு உரைகளும் கருத்தரங்குகளும் ஏனைய நிகழ்ச்சிகளும் இவ்வருடம் கல்வியற் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மனிதராய்ப் பிறக்கும் ஒவ்வொருவரும் தம் வாழ்வதோடு கிறிஸ்தவ விழுமியங்களை வாழ்ந்து காட்டப் பணிக்கப்படுகின்றார்கள். அதிலும் சிறப்பாக விசேட அழைப்பு, பணியினைப் பெறும் குருக்கள், துறவற சகோதர சகோதரிகள் மற்றும் முக்கிய பொறுப்புகளில் உள்ள பொதுநிலை கிறிஸ்தவர்கள் சமூக நலனில் அதிக அக்கறை கொண்டு ஆன்மீக, சமூக வளர்ச்சியில் தம்மை அர்ப்பணிக்க அழைக்கப்படுவதோடு அடுத்தவர்க்கும் பணிசெய்ய அழைக்கப்படுகின்றார்கள்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் பல சமயங்களையும் சேர்ந்த மாணவர்கள் கற்கும் நிலையில் கிறிஸ்தவ மாணவர்கள் ஏனைய மாணவர்களோடு இணைந்து ஆன்மீகம் மற்றும் சமூக நலன் பற்றிய நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்வது மிகவும் வரவேற்கத்தக்கது. இதன் மூலம் மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வையும் ஒற்றுமையையும் வளர்க்க முடியும். ஏனைய மாணவர்களுக்கும் முன் உதாரணமாக விளங்க முடியும்.

அனைத்து மதங்களையும் சேர்ந்த மாணவர்களும் வெவ்வேறு காலங்களில் தமது சமய விழா மூலம் ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்த வவுனியா கல்வியியற் கல்லூரி நிர்வாகம் சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுக்கிறது. இந்த முயற்சிகளை மேற்கொள்ளும் கல்லூரி பீடாதிபதியையும் நிர்வாகத்தையும் பெரிதும் பாராட்டுகிறேன்.பணி செய்ய பயணிக்கத் துடிக்கும் ஒவ்வொருவர் முயற்சியும் வெற்றியளிக்கட்டும். மத, இன வித்தியாசம் பாராது அனைவரும் கைகோர்த்து ஆன்மீகத்தையும் சமூகத்தையும் கட்டியெழுப்ப வாழ்த்துகிறேன்.

கல்வியியற் கல்லூரியின் நிர்வாகமும் மாணவர்களும் முன்னெடுக்கும் அனைத்து நல்முயற்சிகளும் வெற்றியளிக்க செபிக்கிறேன்.இறைவனின் ஆசீர் எப்போதும் உங்களோடு இருப்பதாக.

**கிறிஸ்துவில்,**
**பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்**
**திருகோணமலை மறைமாவட்ட ஆயர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் அவர்களின் ஆசிச் செய்தி

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றத்தினால் இவ்வாண்டு நடாத்தப்படும் கிறிஸ்தவ கருத்தாடலுக்கு "பணிக்காய் பயணிப்போம்" எனும் கருப்பொருளை தேர்ந்தெடுத்ததையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைவதுடன் அதற்கான ஆசிச் செய்தியை எழுதுவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

கிறிஸ்தவர்கள் இறைவனை இயேசுவின் ஆவியின் மூலம் கண்டு இறையனுபவம் பெற்றுள்ள ஒரு குழுவின் உறுப்பினர்கள். தாங்கள் பெற்றுக் கொண்ட இறையனுபவத்தை ஏனைய மக்களோடு பகிர்ந்து கொண்டு வாழ்வது அவர்களின் வாழ்க்கைப்பணி. திருச்சபையானது தனக்காக வாழாது, சமுதாயத்திற்காக, சமுதாய மக்களுக்காக தாழ்ச்சிமிகு அன்புப்பணி புரியவே வாழ்கிறது. இப் பணியினால் தன்னையே வெறுமையாக்கி சமுதாயத்தின் நிறைவை, புதிய நீதியுள்ள சமுதாயத்தைத் தேடி நிற்கிறது. உருவாக்க முனைகிறது. என்பதும் தெளிவாகிறது.

திருச்சபையில் பல்வேறு நிலைகளில் உள்ள பொது நிலையினர் அனைவரும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் தங்களின் அழைத்தலின் மேன்மையை உணர்ந்து அர்ப்பண வாழ்வில் எளிமையைக் கடைப்பிடிக்க வேண்டும். இதனால் உணர்வுப் பூர்வமாக எளிய மக்களோடு தங்களை இணைத்துக் கொண்டு இறையரசை இம் மண்ணில் கட்டியெழுப்ப இயலும்.

இன்றைய திருச்சபையின் பணிகள் நற்செய்தி மதிப்பீடுகளின் அடிப்படையில் அமைய வேண்டும். பணிகளில் உண்மை வெளிப்பட வேண்டும். வியாபார நோக்கில் செயற்படக் கூடாது. பிறரன்பு பணிகளில் தனிக்கவனம் செலுத்த வேண்டும். சாதியம் அப்புறப்படுத்தப்பட வேண்டும். அனைத்திலும் சிறந்த தலைவர்களை உருவாக்கி, ஈடுபடச் செய்து சமுதாய மாற்றுப் பணிகளில் ஈடுபடச் செய்ய வேண்டும்.

மேற்கூறிய கருத்துக்களை நன்குணர்ந்து, கருத்தாடலை சிறப்புறச் செய்து நடைமுறைப்படுத்த வேண்டுமாய் வேண்டி வாழ்த்துகிறேன். கிறிஸ்தவ மன்ற அங்கத்தினர் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பேரருட் தந்தை ஜோசப் பொன்னையா**
**மட்டக்களப்பு ஆயர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி கிறிஸ்தவ மன்ற ஆன்மீக குருவின் ஆசிச்செய்தி

இறைவனை முழு உள்ளத்தோடும் இதயத்தோடும் தேடுபவர்கள் அர்ப்பணத்தில் ஆழம் பெற்றவர்கள். வாழ்வின் நோக்கத்தை புரிந்து கொண்டவர்கள். குடும்ப துறவு நிலைகளில் நமக்குள்ள அர்ப்பணத்தை சிந்திக்கின்ற இந்த அர்ப்பண ஆண்டில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி கிறித்தவ ஒன்றியமும் தமது அயரா முயற்சியால் எழுச்சியுடன் நடாத்தும் இக் கருத்தாடல் களத்துக்கு ஆசி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன். “பணிக்காய் பயணிப்போம்” என்ற கருப்பொருளில் உலகை புதுப்பிக்க அனைவர்க்கும் பொறுப்புண்டு என்ற உண்மையை உணர்ந்து இந் நிகழ்வு ஏற்பாடாயிருப்பது மகிழ்ச்சிகுரியதே. தமது பயிற்சிக்கால செயற்பாடுகளின் ஓர் அங்கமாக இவர்கள் முன்னெடுக்கும் இம்முயற்சியானது இவர்களின் ஆளுமை, உள நிலைகளை பலப்படுத்துவதோடு மட்டுமல்லாது சமுதாய உருவாக்கத்திற்கும் பயனுள்ளதாக அமைய வாழ்த்துகிறேன்.

காவி உடுத்தி காசிக்கு செல்வதும், உலகம் துறந்து ஏகாந்தத்தில் இருப்பதும் மட்டும் துறவல்ல. மாறாக வாழும் சமுகத்தில் சமுக ஈடுபாட்டுடன் அடுத்தவருக்கும் இறைவனுக்கும் ஏற்புடைய வாழ்வை அர்ப்பணிப்போடு பொருள்பட வாழ்வதே உண்மைத் துறவின் அர்த்தமாகும். பின் நவீனத்துவத்தில் உயர்ந்த ஆன்மீகத்தை முதன்மைப் படுத்துவது கடினமான ஒன்றாயினும் அத்தகைய வாழ்வை அர்த்தப்படுத்தும் போது நமது பிறப்பின் நோக்கமும் இறைவனின் சித்தமும் யதார்த்தமாகிறது. எனவே சமுக உருவாக்கலில் தம்மை ஈடுபடுத்த முன் வரும் ஆசிரிய சமூகமும் இந்த உண்மையை உணர்ந்து பணிக்காய் தமது பயணத்தை தொடரவும் இல்லறமாயினும் துறவறமாயினும் அர்ப்பணிப்போடு தம்மை ஈடுபடுத்த ஆசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

**அருட்பணி. யே. லெபோண் சுதன் அ.ம.தி**
**ஆன்மீக குரு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி அவர்களின் ஆசிச்செய்தி

எமது வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி கிறிஸ்தவ மன்றத்தின் நல்ல பாதையில் பணிக்காய் பயணிப்போம் எனும் தொனிப்பொருளில் மாணவர் வாழ்வுக்கான நல்ல பாதையைத் திறக்கிறது. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற வாக்கினை நாங்கள் மனங்கொள்ள வேண்டும். நாளாந்தப் பணியோ அலுவலகப் பணியோ, இறைபணியோ செய்யாத மனிதர்களின் வாழ்வு அர்த்தமற்றதாகி நற்பெயர் அழிந்துவிடும்.

எப்பணியாயினும் நேரிய பாதையில் செல்பவர்கள் இறைவனின் அருள் பெற்றவர்களாகி சிறப்புப் பெறுகின்றனர். அரச போகங்களைத் துறந்து, ஆன்மீகப் பாதையில் சென்று உலகுக்கு ஒளியூட்டிய சித்தார்த்தன் இறைபணியில் இருந்து கொண்டு, ஏழைகளுக்கு உதவிய அன்னை திரேசா, அமைச்சராயிருந்து இறைபணிக்குச் சென்ற திருநாவுக்கரசு நாயனார், அரசனாயிருந்து சிலப்பதிகாரம் படைத்த இளங்கோவடிகள், ஆன்மீகத்திலிருந்து இராஜதந்திரியாகச் செயற்பட்ட கௌடில்யன் என்றவாறு ஒரு பணியை மட்டும் வகித்துக் கொள்ளாமல் பல்வேறு பணிகளிலும் பிரகாசித்தவர்கள் சுயநலப் போக்கற்றுப் பொதுப் பணியில் வெற்றி பெற்றவர்கள். வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வங்களாகிவிட்ட பெருமான்களையும், பெருமாட்டிகளையும் நாம் காணலாம்.

நாம் ஒரு பணியில் இருந்து கொண்டே வேறு நல்ல சமூகப் பணிகளிலும் பயணிக்க நாம் தயாராக வேண்டும். பாதையைத் தேர்வு செய்வது அவரவர் சித்தம். நல்ல பணிகளைச் செய்யவும் இறைசித்தம் தேவை. இதனையே தெய்வ அனுக்கிரகம் என்கிறோம்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மாணவ ஆசிரியர்கள் எல்லாச் சிறப்பும் பெற்று உய்ய வாழ்த்துகிறேன்.

**கு. சிதம்பரநாதன்,**
**பீடாதிபதி**
**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி (நிதி நிர்வாகம்) அவர்களின் ஆசிச்செய்தி

வவுனியா தேசியகல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றம் ''பணிக்காய் பயணிப்போம்''என்ற கருப்பொருளினை மையமாகக் கொண்டு நடாத்தும் கருத்தாடல் நிகழ்விற்கு வாழ்த்துச் செய்தியினை எழுதுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கல்லூரியின் பீடாதிபதி திரு.கு.சிதம்பரநாதன் அவர்களின் வழிகாட்டலின் கீழ் நடைபெறும் இந்நிகழ்வானது, நன்கு திட்டமிடப்பட்டதும், சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டதும், சமூக உறவினை மேம்படுத்தும் நோக்கிலானதுமாக இருப்பதும் கல்விசார் பெறுமதியினை உள்ளடக்கியிருப்பதும் இரட்டிப்பு மகிழ்ச்சிதருவதாகும்.

''ஆர்வம் என்பது முயற்சிகளின் தாயார், அது இல்லையென்றால் எதையும் பெரிதாக சாதித்து விடமுடியாது''(எமெர்சன்)

''ஆர்வம் என்பது உத்வேகத்துடன் கொஞ்சம் ஊக்கம், கொஞ்சம் தூண்டுதல், மற்றும் ஒரு துளி உருவாக்கும் திறன் கொண்ட கலவை'' (பென்னட்)

மேற்கண்ட ஆர்வம் பற்றிய கூற்றுகள், கிறிஸ்தவ மன்றத்தின் முயற்சியினை பிரதிபலிப்பதாக அமைகின்றன. ஏனெனில் ஆர்வம் என்பது அதிவேகமாக பரவக்கூடியது. பங்கேற்கக் கூடியது, மற்றும் உறவுகளை மேம்படுத்தவும், புதிய தொடர்புகளை ஏற்படுத்தவும் உதவுகின்ற மிகவும் சக்திவாய்ந்த ஆயுதம்.

மாணவ ஆசிரியர்கள் தமது ஆர்வத்தினை மேல்மட்டத்திற்கு கொண்டு வருவதன் மூலம் தங்களுடைய இலக்குகளை சாதிப்பதை விரைவுபடுத்திக் கொள்ளமுடியும்.

ஆன்மீக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் மாணவர்கள் தமது ஆர்வத்தினை முடுக்கிக்கொள்வதற்கு கிறிஸ்தவ மன்றத்தின் கருத்தாடல் நிகழ்வு களம் அமைக்கின்றது என்பது நிறைவு மிகுந்த மகிழ்ச்சி தருவதாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ மன்றத்தினரையும் அதன் ஆன்மீக குரு அருட்பணி லெபோண் சுதன், அதன் போசகர் திரு.மி. சூசைதாசன், ஆலோசகர்கள் திருமதி.நெலோமி அன்ரனி குருஸ், திரு. பற்றிக் ஜெராட் அவர்களையும் வாழ்த்துவதோடு கிறிஸ்தவ மன்ற கருத்தாடல் வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

**க. சுவர்ணராஜா,**
**உப பீடாதிபதி,**
**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி (கல்வியும் தரமேம்பாடும்) அவர்களின் ஆசிச்செய்தி

ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்வில் ஏதோவொரு வகையில் பணிக்காக பயணித்துக் கொண்டிருக்கிறான். மனித வாழ்வில் பணிகள் பல. ஆனால் இன்றைய உலகின் லௌகீகப் போக்கு பதவி, பணம், பட்டம் பெற வேண்டும் என்ற ஆசை பணிகளுக்கே இழுக்கை ஏற்படுத்தி வருகிறது.

வாழ்வின் ஒவ்வொரு பொழுதிலும் மனிதர்கள் யாவரும் ஏதோவொரு பணிக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம்.அழைத்தல் என்பது வாழ்வோடு பின்னிப்பிணைந்துள்ளது.மனித சக்தியை கடந்து கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களே அழைத்தல் வாழ்வில் இணைகின்றனர்.

வெளியுலக ஆசைகளைத் துறந்து தன்னலம் துறந்து பிறர் நலம் பூண்டு உள்ளார்ந்த தன்மையோடு யாவரும் பணி வாழ்வில் உள் நுழைய வேண்டும். எவனொருவன் தூய்மையாக இருக்கிறானோ அவனையே கடவுள் பணிக்காக அழைக்கிறார். இது இறையழைத்தல் இதைப்போலவே மனிதர்களாகிய யாவரும் இவ்வுலகில் பணிக்காக அழைக்கப் பட்டிருக்கிறோம்.

வாழ்க்கையில் நிறைவுகாண்பது என்பது எப்படியும் வாழ்ந்து இறக்கலாம் என்பதல்ல. மாறாக வழங்கப்பட்ட பணிவாழ்வை உணர்ந்து சமய விழுமியங்களைப் பின்பற்றி சமய வாழ்வியலை உள்வாங்கி இன, மத மொழி வேறுபாடின்றி எமக்கு வழங்கப்பட்ட பணியை உணர்ந்து அழைக்கப்பட்ட வாழ்வில் எமது பணியை செவ்வனே நிறைவேற்ற பணிக்காக பயணிப்போம்.

அந்த வகையில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்துடன் இணைந்து கிறிஸ்தவ மன்றம் வருடாவருடம் பல்வேறு தொனிப் பொருட்களில் கருத்தாடலை நடாத்தி வருகிறது.

"பணிக்காக பயணிப்போம்" என்ற தொனிப் பொருளிள் நடைபெறும் இவ்வருட கருத்தாடல் எமது பணியை செவ்வனே வெளிக்காட்டவும் சிறப்பாக நடைபெறவும் அதன் நோக்கங்கள் அடையப்படவும் எல்லாம் வல்ல பரம்பொருளின் ஆசிகளை வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

**சு.பரமானந்தம்,**
**உப பீடாதிபதி, கல்வீயும் தரமேம்பாடும்,**
**வவுனீயா தேசிய கல்வீயியற் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி (தொடருறுகல்வி) அவர்களின் ஆசிச்செய்தி

சமயங்கள் மனித வாழ்வின் திசைகருவிகள். மனிதன் அவலம் நிறைந்த இவ்வுலகில் எவ்வாறு வாழ வேண்டும் என்பதைப் போதிக்கின்றன. மனிதன் இவ்வுலக வாழ்வில் எவ்வாறாக நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் எவ்வாறாக நடந்துகொள்ளக் கூடாது என்பதையும் வேறுபடுத்தி அறிவதற்கு சமயங்கள் உதவுகின்றன.

யேசு தன் வாழ்வின் மூலம் மானிடனுக்கு கூறிய செய்திகள் எல்லாம் அவனை மேன்மைப்படுத்துவதற்கான அடிப்படைகளாகும். இந்த அடிப்படைகளை எதிர்கால சமூகமான மாணவர்கள் உள்ளுணர்ந்து கற்றுக் கொள்ள ஆசிரியர்களின் வழிகாட்டல் அவசியமாகும். இந்த வகையில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்கள் தங்களிடையே கிறிஸ்வ மதத்தின் விழுமியங்களையும் தத்துவங்களையும் பரஸ்பரத்தினையும் பரிமாறிக் கொள்ளவும் கிறிஸ்தவ மாநாட்டினை வருடாவருடம் நடாத்தி வருகின்றனர். இவர்களின் இம்முயற்சி இவ்வருடம் "கருத்தாடல்" என்ற புதுப்பொலிவுடன் இடம் பெறுவது பாராட்டுக் குரியதாகும்.

இக்கிறிஸ்தவக் கருத்தாடலை நடைமுறைப்படுத்த உழைக்கும் ஆன்மீக குரு அருட்பணி. லெபோண் சுதன் அவர்களுக்கும், போசகர் திரு.மி.சூசைதாசன் அவர்களுக்கும், ஆலோசகர்களான திருமதி.நெலோமி அன்ரனிகுரூஸ், திரு.பற்றிக் ஜெராட் அவர்களுக்கும் எனது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் உரித்தாகுக.

**தி.ஜெயகாண்டீபன்**
**உபபீடாதிபதி (தொடருறு கல்வி)**
**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி இந்துமன்றப் போசகர் ஆசிச்செய்தி

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றம் நடாத்தும் 2015ஆம் ஆண்டுக்கான கருத்தாடல் பின்வரும் விடயங்களை அன்புள்ளங்களுக்கு கூறுவதற்கு முனைகின்றது.

அதாவது, யேசுகிறிஸ்து காட்டிய பாதையில் பயணிக்கும் ஒவ்வொரு மனிதனும் இறைவனால் உவந்தளிக்கப்பட்ட பணியினைச் செம்மையாகச் செய்கின்ற போதுதான் ஆத்ம திருப்தியினையும் யேசுகிறிஸ்துவின் அன்பினையும் அடைய முடியும் என்ற உயரிய நோக்கோடு “பணிக்காய் பயணிப்போம்” எனும் மகுடவாசகத்தின் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டு கிறிஸ்தவ மன்றத்தால் நடாத்தப்படும் கருத்தாடல் நாம் எடுத்துக் கொண்ட பணியினை உன்னதமாகச் செய்வோம் என்பதனை உறுதி பூணுவதோடு சமூக விழிப்புணர்வினையும் ஏற்படுத்தும் என்பது திண்ணம். எனவே யேசுகிறிஸ்துவின் உன்னத சிந்தனையின் வழியின் பால் பயணிக்கும் இம் மன்றத்தின் செயற்பாடுகள் வெற்றியளிக்க இறை அருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திரு. ச. பவானந்தன்,**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
**(இந்துமன்றப் போசகர்),**
**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி முஸ்லீம் மஜ்லிஸ் போசகர் ஆசிச்செய்தி

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றத்தினால் வருடா வருடம் கருத்தாடல் நடாத்தப்படும் போது சமூகத்துக்குத் தேவைப்படும் தொனிப்பொருள் ஒன்று மையப்படுத்தப்படும். இவ்வருடத்திற்கு "பணிக்காய் பயணிப்போம்" எனும் தொனிப்பொருள் கிறிஸ்தவ திருச்சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமைப்படுகின்றேன்.

இக்காலத்துக்குப் பொருத்தமான தொனிப்பொருள் இது. உலக சமூகம் தொழில் நுட்ப சாதன வளர்ச்சியின் காரணமாகவும் மற்றும் பல்வேறு சூழ்நிலைகளாலும் சிறியோர் முதல் பெரியோர் வரை இயேசுநாதர் காட்டிய நேரான பாதையை விட்டு விலகி நடந்து தமது வாழ்க்கையை சீரழிக்கின்றனர். குற்றச் செயல்கள் மலிந்து காணப்படுகின்றன. இயேசு பிரான் மக்களின் நல்வாழ்வுக்காக தம்மை அர்ப்பணித்தார். அவர் காட்டிய வழியாய் மக்களை வாழ வைப்பதற்காக பயணிக்க வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உண்டு.

இப்பணியை ஒரு சிலர் மட்டும் செய்து குறுகிய காலத்தில் மக்களின் வாழ்க்கையை நேர்வழிப்படுத்த முடியாது. இப்பணிக்காய் தம்மை அர்ப்பணித்து செயல்படுபவர்களுடன் நாமும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டியது காலத்தில் தேவையாக உள்ளது.

வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரியின் கிறிஸ்தவ மன்ற சமூகத்துடன் இணைந்து நாம் அனைவரும் பணிக்காய் பயணிப்போம் என வாழ்த்துகின்றேன்.

**செ. சஹாப்தீன்,**
**முஸ்லீம் மஜ்லிஸ் போசகர்,**
**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
## கிறிஸ்தவ மன்றக் காப்பாளரின் ஆசிச்செய்தி

"பணிக்காய் பயணிப்போம்" எனும் மகுட வாசகத்தினை மையமாகக் கொண்டு அர்ப்பண ஆண்டுக்கான கிறிஸ்தவக் கருத்தாடல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். அவர்கள் தம் முயற்சிக்குப் பாராட்டுக் களையும் இறையாசியையும் வேண்டி நிற்கின்றேன். 2007ஆம் ஆண்டு முதல் இன்று வரை கிறிஸ்தவ மன்றம் கிறிஸ்தவ மாநாட்டை தாய்த்திருச்சபையின் ஆண்டுப்பிரகடனத்திற்கான தொனிப்பொருளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் முன்னெடுத்து வருகின்றது. அத்தனை மாநாடுகளிலும் பங்காளனாகவும், உடனுழைப்பாளியாகவும் இருந்துள்ளேன். இவ்வாண்டும் கிறிஸ்தவக் கருத்தாடல் நிகழ்வை நடத்த அருள் புரிந்தமைக்கு இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். தேசிய கல்வியியற் கல்லூரியின் மாணவர்கள் தம் பயிற்சிக் காலத்தில் பல்வேறு செயற்றிட்டங்களைச் செவ்வனே திட்டமிட்டு, ஒழுங்கமைத்து, நெறிப்படுத்திச் செயற்படுத்தப் பயிற்சி பெறுகின்றனர். அந்த வகையில் இதுவும் பயிற்சியின் ஒரு பகுதியே. இதன் மூலம் அநேக அனுபவங்களை மாணவ ஆசிரியர்கள் தமதாக்கிக் கொள்வர்.

அர்ப்பணம் என்பது இல்லறம், துறவறம் ஆகிய இரு திறத்தார்க்கும் பொதுவானது. கிறிஸ்துவில் திருமுழுக்குப் பெற்ற நம்பிக்கையாளன் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின்பணியாளன் ஆகின்றான். அதே போல் பல்வேறு சமயங்களைச் சார்ந்தோரும் தத்தமக்குரிய பணியை உணர்ந்து மதித்து, பொறுப்போடும், தியாக மனப்பான்மையோடும், தூர நோக்கோடும் செயற்படுத்த இக்கருத்தாடல் அழைப்பு விடுக்கின்றது. அந்த வகையில் கருவறையில் தொடங்கும் மனித வாழ்வு கல்லறை வரை இம்மை வாழ்வு என்ற வரையறைக்குள் இயங்குகின்றது. கல்லறையுள் பூந்தேகம் சங்கமமாகிவிட ஆத்மாவோ மறுமை (நிலைவாழ்வு) இன்பத்திற்கு சென்று சேர்கின்றது என்பது எல்லா மதங்களினதும் நம்பிக்கையாக உள்ளது. ஆகவே இவ்வுலகில் உடலோடிணைந்து இயக்கம் பெறும் ஆத்மாவானது தன்பணி உணர்ந்து செவ்வனே ஆற்றுவதன் மூலம் தானும் தன்னைச்சூழ வாழும் மனிதகுலமும், ஏனைய மரஞ்செடி, கொடி, விலங்கினம், பறவை ஐம்பூதங்கள் அனைத்தும் செழிப்புறப் பணி செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியாளராயினும் அடிமைக் குடிமகனாயினும், குழந்தையாயினும் கூன் விழு கிழவனாயினும் உயிருடனுள்ள வரை தம் பணியைச் செவ்வனே ஆற்றுவராயின் உருளும் இவ்வுலகம் உறுதி பெற்று நீண்ட ஆயுள் பெறும். மனித குலமும் நீடிய வாழ்வு பெற்று இறைவனுடன் மனிதன் கூடிவாழும் இன்பவனமாக எழுச்சி பெறும். தாய்த் திருச்சபையின் வளர்ச்சிக்காய் சேய்த்திருச்சபை தன் பணியாற்ற முயன்றமையை வாழ்த்தி நன்முயற்சிகள் நானிலத்தில் தொடரவும் நல்வாழ்வு பெற்று மனிதகுலம் மிளிரவும் இறை துணை வேண்டி நிற்கின்றேன்.

**திரு. மி. சூசைதாசன்,**
**காப்பாளர், கிறிஸ்தவ மன்றம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ மாநாடு – 2015
# "பணிக்காய் பயணிப்போம்"

**கருத்தாடலின் நோக்கங்கள்**

- இல்லற, துறவற வாழ்வில் அர்ப்பண வாழ்வின் தாற்பரியத்தை உணர்தல்
- அர்ப்பணம் என்பதன் மகத்துவத்தையும் மேன்மையையும் உணர்தல்
- துறவற அர்ப்பண வாழ்வை மேற்கொள்வதற்கு குருக்கள் துறவிகளை சகல வழிகளிலும் ஊக்குவித்தல்
- மாணவ ஆசிரியர்களிடையே சமய விழுமிய விருத்தியை மேம்படுத்தலும், அவர்களிடையே புரிந்துணர்வு வளர வழி வகுத்தல்
- கிறிஸ்தவ விசுவாசத்தை ஆழப்படுத்தலும், இறையன்பில் வாழவும் வளரவும் வழிப்படுத்தல்

**எதிர்பார்க்கப்படும் விளைவுகள்**

- மாணவ ஆசிரியர்களுக்கு கருத்தாடல் பற்றிய அனுபவங்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- "பணிக்காய் பயணிப்போம்" என்ற கருப்பொருளை ஏற்றுக் கொண்டு பணி வாழ்விற்கு சான்று பகரும் மாணவ ஆசிரியர்களை உருவாக்குதல்
- அனைத்து வேறுபாடுகளையும் தகர்த்தெறிந்து நம்பிக்கை வாழ்வில் வாழ்ந்து இறைவனுக்கும் பிறருக்கும் ஏற்ற வாழ்வு வாழ்தல்
- சமூகத்தில் தமது பணி என்ன என்பதை உணர்ந்து அதற்காக தம்மை அர்ப்பணித்து வாழ்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கிறிஸ்தவ மாநாடு ஆண்டு | மகுட வாக்கியம் | அரங்குகள் | தலைப்புக்கள் |
|---|---|---|---|
| 2007 | "செபத்தின் வழியில் இறைவன் மடியில்" | வண பிதா.பி.ஏ.தோமஸ் அரங்கு | வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் செபம் |
| | | வீரமா முனிவர் அரங்கு அன்னை திரேசா அரங்கு | இன்றைய விடுதலை வாழ்விற்கு இறுதி ஆயுதம் செபமே |
| | | நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அரங்கு | இரக்கத்தின் இறைவனை கவரக்கூடிய செபங்கள் |
| 2008 | "இறை வார்த்தையே நிறை வாழ்வு" | தமிழ்தூது தனிநாயகம் அடிகளார் அரங்கு | சகோதரத்துவம் பற்றி மதங்கள் கூறுகின்றன. இறைவன் விரும்பும் மனிதன் |
| 2009 | "வாழ்வுக்கு வழிகாட்டும்விசுவாசம்" | தியேகுப்பிள்ளை ஆண்டகை அரங்கு | வாழ்வின் பிரச்சினைகளுக்கு சமயங்கள் காட்டும் வழி தீர்வாகிறது. |
| | | தாவீது அடிகளார் அரங்கு | திருமணம்-திருச்சபை சிவில் சட்ட நோக்கு |
| 2010 | மாணவர் அனுமதிக்கப்படாமையால் மாநாடு நடத்தப்படவில்லை | | |
| 2011 | "இளைஞனே மாண்புறு சமூகம் உன்னுடையதே" | எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகை அரங்கு | சமகால இளைஞர்கள் எதிர்நோக்கும் சவால்களும் தீர்வுகளும் |
| | | அடைக்கல முத்து (அமுது) அரங்கு | தற்கால இளைஞர்களின் பங்கு |
| 2012 | "மறைவாழ்வால் இறை வாழ்வை நோக்கி" | முத்திப் பேறு பெற்ற யோசப்வாஸ் அரங்கு | வாழ்வியலைத் தொடாத மறைக்கல்வி பொருளற்றது. மறைக்கல்வியின் தோற்றமும் இன்றைய நிலையும் |
| | | செவாலியர் ஜேம்ஸ் வேதநாயகம் பெல்டானோ அரங்கு | கிறிஸ்துவின் மறைப் போதனைகள் அன்று மக்களை அடைந்தன என்றால் இன்றைய போதனைகள்....... மறைக்கல்வி மீதான ஆர்வம் குறைவடைந்து வருகிறதா |
| 2013 | "இறை நம்பிக்கையே வாழ்வின் ஒளி" | யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளார் அரங்கு, நாட்டுக்கூத்து கலாநிதி பூந்தான் யோசேப்பு அரங்கு | குடும்பமே நம்பிக்கை வாழ்வின் விளை நிலம் இறை விசுவாச வாழ்வின் சவால்கள். |
| 2014 | "குடும்பமே சமூக வாழ்வின் ஊற்று" | புனித XXIII அருளப்பர் அரங்கு மன்னார் வேத சாட்சிகள் அரங்கம் | "குடும்ப வாழ்வில் ஏற்படும் சவால்களும் வெற்றி கொள்ளலும்" "இன்றைய குடும்ப வாழ்வியல் வளர்ச்சியடைந்துள்ளது. தளர்ச்சியடைந்துள்ளது" |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கிறிஸ்தவ மாநாடு ஆண்டு | மகுட வாக்கியம் | அரங்குகள் | தலைப்புக்கள் |
|---|---|---|---|
| 2015 | பணிக்காய் பயணிப்போம் | புனித 2ம் யோவான் பவுல் அரங்கு | துறவு நெறி பற்றிய பல்வேறு மதங்களின் நோக்குகள்<br>இல்லறமும் துறவறமும் உலக இயங்குகையின் இரு பெரும் சக்திகள் |
| | | அருட்பணி அதிரியான் யோசேப்பு அரங்கு | வழக்காடு மன்றம்<br>துறவறம் சிறக்க இல்லறத்தாரின் பங்களிப்பு போதாது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்
# வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
# கிறிஸ்தவ கருத்தாடல் -2015
# "பணிக்காய் பயணிப்போம்"

காலம் :- 07.11.2015
இடம் :- பலநோக்கு மண்டபம்
நேரம :- மு.ப 8.30 பி.ப 3.30 மணி
மு.ப 8.30 :- விருந்தினர் வரவேற்பு
மு.ப 8.40 :- ஒளியேற்றல்
மு.ப 8.45 :- இறைவழிபாடு (ஆவியான தேவனே...)
மு.ப 8.55 :- வரவேற்புரை
மு.ப 9.00 :- வரவேற்பு நடனம்
மு.ப 9.10 :- தலைமையுரை
மு.ப 9.15 :- ஆசிச்செய்தி - இளைப்பாறிய ஆயர் திருகோணமலை மறைமாவட்டம்
(அதிவண.கிங்ஸ்லி சுவாம்பிள்ளை)
மு.ப 9.30 :- பாடல் (நானே உன் கடவுள்...)
மு.ப 9.35 :- அமர்வு 01

**புனித 2ம் யோவான் பவுல் அரங்கு**

**அரங்கு அர்ப்பணம்**

ஆசிச்செய்தி திருகோணமலை மறைமாவட்ட ஆயர்
நடத்துனர்- செல்வி.பிளீசியா பெர்னாண்டோ
உரை -1 **"துறவுநெறி பற்றிய பல்வேறு மதங்களின் நோக்குகள்"**
பேச்சாளர்கள்- அருட்பணி.அன்புராசா அ.ம.தி
செல்வன்.S.பிரதீப் (ஆசிரிய மாணவன்)
உரை -2 **"இல்லறமும் துறவறமும் உலக இயங்குகையின் இருபெரும் சக்திகள்"**
பேச்சாளர்கள் - திரு.F.X.அன்ரன்
செல்வி. P.அருட்செல்வி (ஆசிரிய மாணவி)
நினைவுச்சின்னம் வழங்கல்

மு.ப 10.55 :- தேநீர் இடைவேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப 11.30 :- பாடல் (அர்ப்பணம் நான் அர்ப்பணம்....)
முப 11.35 :- பீடாதிபதி உரை- திரு.கு.சிதம்பரநாதன்
முப 11.45 :- அமர்வு -02

**அருட்பணி.அதிரியான் யோசேப்பு அ.ம.தி. அரங்கு**
அரங்கு அர்ப்பணம்
ஆசிச்செய்தி யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆயர்கள்

**வழக்காடு மன்றம்**

**வழக்கு:- "துறவறத்திற்கு இல்லறத்தாரின் பங்களிப்பு போதாது"**

நீதிபதி.அருட்பணி.தமிழ்நேசன்
வாதிகள் - அருட்பணி.ரமேஸ்- அ.ம.தி
அருட்சகோதரி.லுமினா - தி.க
பிரதிவாதிகள் - திரு.கி.உதயகுமார் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
திருமதி.சுனிதா
(கிறிஸ்தவ பாடநெறி ஆசிரியர்)

பி.ப 12.45 :- நினைவுச்சின்னம் வழங்கல்
பி.ப 12.50 :- பாடல் (என் ஜீவன் தேடும்...)
பி.ப 12.55 :- மதிய உணவு


**மாலை நிகழ்வுகள் (கலையரங்கம்)**

பி.ப 1.50 :- நடனம்
(நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி)
பி.ப 2.10 :- குறும்படமும் கலந்துரையாடலும்
திரு.க.சுவர்ணராஜா
உப பீடாதிபதி (நிதி, நிர்வாகம்)
பி.ப 2.35 :- வயலின் கச்சேரி
பி.ப 3.05 :- நினைவுச்சின்னம் வழங்கல்
பி.ப 3.15 :- நன்றியுரை:-
பி.ப 3.25 : நன்றிப்பாடல்
பி.ப 3.30 :- கல்லூரிக் கீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கு-01



## புனித 2ம் யோவான் பவுல் (1920-2005)

1ம் யோவான் பவுலின் சடுதியான சற்றும் எதிர்பாராத மரணத்தைத் தொடர்ந்து போலந்து நாட்டுக் கருதினாலான கறோல் வெயிற்றிலா (Carol Wojtyla) என்பவர் திருத் தந்தையாக தெரிந்துகொள்ளப்பட்டார். இவர் திருச்சபையின் 264 வது திருத்தந்தையாவார். இவர் தெரிவு செய்யப்பட்டபோது கிறக்கோவ் (Cracowe) நகரில் பேராயராக இருந்தார். அப்போது இவருக்கு வயது 58 ஆகும். போலந்து நாட்டைச்சேர்ந்த ஒருவர் திருத்தந்தையாக தெரிவு செய்யப்பட்டமை இதுவே முதன்முறையாகும்.

இவர் 1920 வைகாசி 18ம் திகதி போலந்தில் பிறந்தார். இவரது இயற் பெயர் கறோல். இவர் தன் அன்னையின் வயிற்றில் இருக்கும் போது தாயின் நோயுற்ற உடல் நிலையை எண்ணி கருவை கலைக்கும் படி வைத்தியர் கூறினார். ஆனால் தாய் அதை விரும்ப வில்லை. கறோல் பிறந்த பின் தாயின் உடல் நிலை மிகவும் மோசமாகியது. கறோலினின் சிறு பராயம் துன்பங்கள் நிறைந்ததாகும். இவர் 1946 ம் ஆண்டு கார்த்திகை 1ம் திகதி குருப்பட்டம் பெற்றார்.1958 ம் ஆண்டு ஆயராக அபிஷேகம் செய்யப்பட்டார். அதன்பின் 1967 இல் கருதினாலானார். ஆரம்பக் காலத்தில் இருந்தே இவர் கொமினிஸ்ட் கட்சிக்கு எதிராக செயற்பட்டார். 1978 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 16ம் திகதி 2ம் யோவான் பவுல் என்ற பெயரில் திருத்தந்தையாகத் தெரிவு செய்யப்பட்டார். 1981ம் ஆண்டு வைகாசி மாதம் 13ம் திகதி அலி அஹா என்பவரால் சுடப்பட்டார். ஆயினும் உயிர் ஆபத்தில் இருந்து காப்பாற்றப்பட்டார். பின்னர் அவருக்கு மன்னிப்பு அளித்தார்.

திருத்தந்தை 2ம் யோவான் பவுல் 300 இலட்சத்துக்கு மேற்பட்டவர்களைத் தனிப்பட்ட முறையில் சந்தித்துள்ளார். 130 நாடுகளுக்கும், 615 பிரதேசங்களுக்கும் பயணம் செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் முழுவதும் 104 முறை பயணம் செய்துள்ளார். கிறிஸ்துவின் நற்செய்தியை வெளிப்படுத்துவதற்காகவே இவை அனைத்தையும் செய்தார். 1995 ம் ஆண்டு தை மாதம் 20 ம் திகதி இலங்கைக்கு வருகை தந்து இலங்கையின் அப்போஸ்தலரான யோசப்வாஸ் அடிகளாரை முத்திப்பெறு பெற்ற நிலைக்கு உயர்த்தினார். யூத செபக்கூடத்திற்கும், இஸ்லாமிய பள்ளிவாசலுக்கும் சென்ற முதல் திருத்தந்தை இவராவார். 14 சுற்று மடல்களையும், 110 அப்போஸ்தலிக்க அறிவுரைகளையும், 11 மறையுரைகளையும், எண்ணிலடங்காத கடிதங்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய "திறஸ்ஹோல்ட் ஒப் ஹோப்" (Threshold of Hope)என்ற புத்தகப் பிரதிகள் மட்டும் 20 இலட்சம் விற்பனையாகின. மேற்கு, கிழக்கு ஜேர்மனி என வேறுபடுத்திய பேர்லின் மதிலை உடைத்து நாட்டை ஒன்று சேர்ப்பதில் இவரே முன்னின்றார். திருச்செபமாலையின் ஒளியின் மறையுண்மைகளை அறிமுகம் செய்தார்.

"முழுவதும் உங்களுக்காகவே" என்பது இவரது விருது வாக்கு. இவர் "பயணம் செய்யும் திருத்தந்தை" என்ற அடை மொழியுடன் உலகின் பெரும்பாலான நாடுகளுக்கு சென்றார். சென்ற இடமெல்லாம் முதலில் அந்நாட்டு மண்ணை முத்தமிட்டு ஏழைகள், செல்வந்தர் என்ற பாகுபாடு மறைய வேண்டுமென்று மறையுரை ஆற்றினார்.இவர் சர்வாதிகாரிகளையும், அடக்குவோரையும் சந்தித்து மனித அடிமைத்தனத்தை முடிவுக்கு கொண்டு வரும் கிறிஸ்துவின் தூதராக விளங்கினார்.

வறிய நாடுகளை அடிமைப்படுத்தும் செல்வந்த நாடுகளுக்கு எதிராக கோசமிட்டு பேசினார். "பாகின்ஸன்" எனும் நோயினால் பீடிக்கப்பட்டிருந்த போதும் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் தவறாது நிறைவேற்றினார்.மக்களின் துன்ப துயரங்களையும், அவர்களின் பலவீனங்களையும், உடல் துன்பங்களையும் கண்டு அவர்களுக்கு உதவியதால் "மனிதனுக்கு உதவுபவர்" என அறிமுகப்படுத்தப்பட்டார்.

இவர் 2005 சித்திரை 2ம் திகதி இறைவனடி சேர்ந்தார். 2011 வைகாசி, 1ம் திகதி முத்திப்பேறுபெற்ற நிலைக்கு உயர்த்தப்பட்டார். மீண்டுமாக 2014 சித்திரை மாதம் 27ம் திகதி எமது தற்போதைய திருத்தந்தை பிரான்சிஸினால் புனிதராகப் பிரகடனப்படுத்தப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரை-01

# சமயங்களில் துறவறம்

## முன்னுரை

துறவறம் இல்லறத்தைப் பார்க்கிலும் சிறப்பானதாக உயர்வானதாக நோக்குகின்ற போக்கு எல்லா மக்கள் மத்தியிலும் இருக்கிறது. ஆயினும் அடிப்படையில் சமயங்களின் தொடக்கநிலையில் துறவறம் அச்சமயங்களில் எவ்வாறு பார்க்கப்படுகின்றது என்பதை பல்வேறு சமயங்களின் பின்னணியில் நின்று பார்ப்பது உண்மையில் சுவாரசியமானது. அவ்வகையில் சமயங்களில் துறவறம் எவ்வாறு நோக்கப்படுகின்றது என்பது இங்கு இரத்தினச் சுருக்கமாகத் தரப்படுகின்றது.

## இந்துசமயத்தில்

இந்து மதப் போதனையின்படி சாதகன் ஒருவன் ஆன்ம ஈடேற்றம் பெற 1. பிரமச்சரியம் (Brahmacharya), 2. கிருகஸ்தம் - இல்லறம் (Grihastha), 3. வானப்பிரஸ்தம் (Vanaprastha) சன்னியாசம் (Sannyasa) ஆகிய 04 படிநிலைகள் உண்டு. ஆன்ம ஈடேற்றம் அடைய இந்நான்கு படிநிலைகளும் கட்டாயமானவையாகா விட்டாலும் இவை ஒருவர் அந்நிலையை அடைய உதவுபவையாக இருக்கின்றன.

1.பிரமச்சரியம் என்பது இளைய வயதில் ஒரு குருவின் பொறுப்பில் இருந்து வரன்முறையான கல்வியையும் பட்டறிவையும் ஏனைய பயிற்சிகளையும் பெற்று வாழ்க்கைக்குத் தன்னை தயாராக்கும் நிலையைக் குறிக்கும். இப்பயிற்சியின் நிறைவில் அவர் இல்லறத்திற்குள் செல்ல முடியும்.

2.கிருகஸ்தம் என்றால் இல்லறம் என்று பொருள். அவர் திருமணமாகி, பிள்ளைகளைப் பெற்று இல்லறப் பொறுப்புக்களை நிறைவேற்றுவார். தன்னாலான வேலையைச் செய்து உழைத்து செல்வம் சேர்ப்பது இந்நிலையில் அடங்கும்.

3.வானப்பிரஸ்தம் என்பது வனத்தை நோக்கிச் செல்வதாகும். குடும்பப் பொறுப்புக்களை எல்லாம் நிறைவுசெய்துவிட்டு தனியாகவோ அல்லது துணையுடனோ காட்டுக்குச் சென்று தவம செய்வதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.சன்னியாசம் என்பது முழுமையாகத் துறத்தல் என்று பொருள். அதாவது தனக்கென்று ஒன்றும் இல்லாத நிலையில் பிச்சை எடுத்து தன் வாழ்க்கையை வாழ்பவர். இவ்வாறான பற்றற்ற நிலையில் ஒருவர் ஆன்ம ஈடேற்றம் பெறுவார்.

**பௌத்தத்தில்**

பௌத்த மதத்தில் துறவறத்தைத் தோற்றுவித்தவர் புத்தராவார். புத்தர் துறவியாவான் என்று அவருடைய சோதிடத்தில் இருந்ததால் அரசகுலத்தைச் சேர்ந்த புத்தரின் தந்தை கவலையுற்றார். எல்லா சுகபோகங்களையும் அளித்தார். எதிர்மறையான எதுவும் கண்ணில் படாதவாறு புத்தர் பாதுகாக்கப்பட்டார். எனினும் ஒருநாள் பிணியாளன் ஒருவனைக் கண்டபோது இவ்வுடலுக்கு நோய்வரும் என்பதையும், கூனிக்குறுகிச் சென்ற முதியவர் ஒருவரைக் கண்டதும் முதுமை ஏற்படும் என்பதையும், பிறகு ஓர் இறந்த மனிதனை தூக்கிக்கொண்டு போவதைக் கண்டவர் சாவுவரும் என்பதையும் உணர்ந்து கொள்கின்றார்.

ஆக, முதுமையிலிருந்து, நோயிலிருந்து, சாவிலிருந்து மனிதன் தப்பிக்க முடியாது. உலகம் துன்பமயமானது; என்ற முடிவுக்கு வந்ததாராயினும் "உலகம் துன்பமயமானது" என்பதோடு புத்தர் நின்றுவிடாமல் இத்துன்பத்திலிருந்து எப்படி விடுதலை அடைவது? என்று சிந்தித்ததும் இவற்றிலிருந்து மீள்வதற்கு வழி கண்டடைந்ததும்தான் புத்தரின் சிறப்பாகும்.

ஏன் பிறவி வருகிறது? பிறவி ஏன் வருகிறது என்றால் ஆசைப்படுவதால்! ஆசையை நிறுத்தினால் பிறவி வராது. துக்கம், துக்கத்தின் உற்பத்தி, துக்க நிவாரணம் - துக்க நிவாரண வழி. இதனை ஒரு மெய்யியல் சித்தாந்தமாக வகுத்தார். துக்கம் என்பது உண்மை, துக்கத்தின் மூலம் என்பது உண்மை, அதற்கான தீர்வு என்பது உண்மை, அதனை அடைவதற்கான வழி என்பதும் உண்மை. இந்த மீட்சிக்கு வழி துறவுதான் என்ற முடிவுக்கு வந்தார் புத்தர். அதனை திருமணமாகாத மணத்துறவு நிலையில் அல்லது இல்லறத்தில் வாழ்ந்தபின் வானப்பிரஸ்த நிலையில் மேற்கொள்ளலாம்.

**இஸ்லாத்தில்**

சுருங்கக் கூறின் இஸ்லாத்தில் துறவறம் கிடையாது என்றே சொல்லப்படுகின்றது. ஒவ்வொருவரும் திருமணம் செய்து வாழவேண்டும் என்றே இஸ்லாம் போதிக்கின்றது. நபிகள் பெருமானார் இதுபற்றிக் குறிப்பிடும்போது,"திருமணம் செய்துகொள்ளாதவர்கள் என்னைச் சாந்தவர்கள் அல்ல" என்று கூறியிருக்கின்றார். காரணம் திருமணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யாதிருப்பதை மனித வாழ்வுக்கு உகந்ததாக இஸ்லாம் ஏற்றுக்கொள்வதில்லை என்பதோடு திருமணம் இறைவனால் மனிதர்களுக்கு அருளப்பட்ட உன்னதமான கொடைகளுள் ஒன்று. ஆகவே, தனித்து வாழ்தலை இஸ்லாம் ஊக்கப்படுத்துவதில்லை. ஆனால் ஒரு காலத்தில் இறைவன் மீது அதிக - அதீத பக்திகொண்ட சிலர் தெய்வ வழிபாடுகளில் ஈடுபட்டுக்கொண்டு இருந்திருக்கிறார்கள். உவைசுல் கருமி என்ற ஒரு பெரிய மனிதர் நபிகள் நாயகம் அவர்களின் காலத்தில் இவ்வாறு வாழ்ந்திருக்கிறார் என்று சொல்லப்படுகின்றது.

**கிறிஸ்தவத்தில்**

கிறிஸ்தவத்தில் துறவற வாழ்வு என்பது அதன் தொடக்க காலத்திலும், திருச்சபையினுடைய போதனையிலும், இறையியல் பண்பிலும் பொதுநிலைத்தன்மை கொண்டதாகவே விளங்குகின்றது. துறவறம் பொதுநிலையினர் அழைப்பின் ஒரு தனித்துவமான ஒரு வகையே அன்றி பொதுநிலைத்தன்மையில் இருந்து வேறுபட்ட அல்லது மேலான இன்னுமொரு நிலை அல்ல. இதனை வத்திக்கான் சங்க ஏடு பின்வருமாறு கூறுகிறது: ''திருமுழுக்கு அர்ப்பணத்தில் ஆழமாக வேரூன்றியும்; அதை அதிக நிறைவாக வெளிப்படுத்துவதுமான தனி ஒரு அர்ப்பணம்'' துறவற வாழ்வைத் தழுவியமைத்துப் புதுப்பித்தல் (இல.02) என்கிறது.

ஆக, திருமுழுக்கின் வழியாகப் பெற்றுக்கொண்ட கிறிஸ்துவின் முப்பணிகளான அரச, குருத்துவ, இறைவாக்குப் பணிகளில் பங்கேற்கும் பொதுஅழைப்பை ஆழமாகவும் முழுமையாகவும் வாழ்கின்ற பொதுநிலையினரின் ஒரு பகுதியினரே துறவறத்தினர்.

பொதுநிலையினர் திருமுழுக்கின் வழியாகப் பெற்றுக்கொண்ட அழைப்பை ஆழமாகவும் நிறைவாகவும் வாழ்வதற்கும் துறவறத்தினர் வாழ்வதற்கும், இடையில் முக்கியமான மூன்று அம்சங்கள் உள்ளன.

1. இறையாட்சியையும் நற்செய்தி மதிப்பீடுகளையும் செயற்படுத்தி, தீவிர மாற்றுக்கலாசாரத்தை உருவாக்குதல்.
2. அப்போஸ்தலிக்க குழும வாழ்க்கை
3. ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிதல் என்னும் மூன்று உறுதிப்பாடுகள் வழியாக வாழ்ந்து காட்டுதல்

**செ. அன்புராசா, அ.ம.தி.**
**மாங்குளம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரை-02

# இல்லறமும் துறவறமும் உலக இயங்குகையின் இருபெரும் சக்திகள்.

## இல்லறத்தின் வகிபங்கு

முரண்விசைகளுக்கிடையிலான தாக்கத்தின் விளைவு அல்லது அசைவு "இயங்குசக்தி" என அழைக்கப்படும் என தனது "இயக்கவியல்" (DIALECTIC) தத்துவத்தை முன்மொழிந்தார் ஜேர்மனிய தத்துவவியலாளர் பிரட்றிச் கெகல் (1770-1831). இயற்கை விஞ்ஞானத்தின் பல்வேறு தோற்றப்பாடுகளான பகல்- இரவு, சூடு-குளிர் போன்ற விடயங்களுக்கும் கெகலின் இயக்கவியலே விளக்கமளிக்கின்றது. இத்தத்துவத்தை அடியொற்றி கார்ல் மார்க்ஸ்,பிரட்றிக் எங்கல்ஸ் தமது "பொருள்முதல்வாதம்" (Das Capital) என்னும் நூலினூடாக புதிய உலக ஒழுங்கொன்றினை உருவாக்க முனைந்தனர். கெகலின் இயக்கவியல் தத்துவம் இயற்கை விஞ்ஞானம் மற்றும் பொருளியல் பரப்புக்களுக்கு அப்பாலும் உலக இயங்குகையின் பல்வேறு பரிமாணங்களுக்கும் பொருத்தப்பாடுடையதாக விளங்குவதைக் காணலாம். ஆயினும் முரண் விசைகள் என்ற பதத்தை மாற்று நிலைகள் (ஒரு நாணயத்தின் இரு பக்கங்கங்கள் போல) எனவும், தாக்கம் என்பதை சமநிலையாக்கம் எனவும் பதப் பிரயோகம் செய்வதன் மூலம் இயக்கவியல் தத்துவத்தை எக்காலத்திற்கும், எவ்விடயத்திற்கும் ஏற்புடையதாக்கலாம்.

இந்த வகையில் ஆன்மீகரீதியில் அல்லது அறவியல் ரீதியில் (morality) உலக இயங்குகையின் இருபெரும் சக்திகளாக நோக்கப்படும் இல்லறவியலையும், துறவறவியலையும் ஊடறுத்து நோக்க விளைகின்றேன்.

## இல்லறத்தின் தோற்றம்

கிறிஸ்தவர்களின் புனித நூலாகிய திருவிவிலியத்தின்படி மனிதன் படைக்கப்பட்டபோதே இல்லறமும் உருவாக்கப்பட்டதாகவே கருதப்படுகின்றது. "கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார்.கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள். அதை உங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றலுக்கு உட்படுத்துங்கள். கடல் மீன்கள்,வானத்துப்பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள் என்றார்" ( தொடக்க நூல் 1: 27-28). எனவே இல்லறம் என்பது கடவுளால் படைக்கப்பட்டது,புனிதமானது என்பது புலப்படுகின்றது.

## துறவறத்தின் தோற்றம்

திருவிவிலியத்தின்படி கிறிஸ்து தன் இவ்வுலக வாழ்வின் நிறைவு நாளுக்கு முந்திய நாள் (பெரிய வியாழன்) அன்று குருத்துவத்தை உருவாக்கினார். ஆயினும் ஆதித் திருச்சபையின் வரலாற்றிலே ஆரம்பத்தில் ஜெபக் கூட பொறுப்பாளர்களோ அன்றேல் திருவழிபாடுகளை நடத்தியோரோ துறவிகளாக இருக்கவில்லை. கிறிஸ்தவம் உரோமாபுரிக்குள் அடியெடுத்து வைத்த பின்பே திருப்பலி நிறைவேற்றுவோர் தூய்மையாக இருக்க வேண்டும் என்றும், பாலியல் உறவுகளில் ஈடுபடக் கூடாது என்றும், அவர்கள் தம் கற்பை இறைவனுக்கு அர்ப்பணித்து துறவு பூணவேண்டும் என்றும் கருத்துக்கள் வலுப் பெற்றன. கி.பி 325 இல் கூடிய நீசேயா சங்கத்தில் குருக்கள் திருமணம் செய்வதோ அன்றேல் குடும்ப வாழ்வில் ஈடுபடுவதோ தடைசெய்யப்பட வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. இதன் பின்னர் காலத்திற்கு காலம் இக்கருத்து வலுப்பெற்று துறவிகள் மரபு திருச்சபையில் தோற்றம் பெற்றது. கற்புக் காத்தல், கீழ்ப்படிதல், தரித்திரம் பூணல் என்பன துறவிகளின் தலையான பண்புகளென வாக்குறுதி பெறப்பட்டது.

### திருச்சபையில் துறவிகள் ஆதிக்கம்

துறவிகள் குடும்பப் பொறுப்பு இன்றி வாழந்தமையாலும், பொருளாசையற்று செயற்பட்டமையாலும் திருச்சபையின் செயற்பாடுகள் மட்டில் அதிக அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர். இதனால் படிப்படியாக திருச்சபையின் தலைமையும், கட்டுப்பாடும் துறவிகள் வசமாகின. காலப்போக்கில் பொது நிலையினர் என வகைப்படுத்தப்பட்ட இல்லறத்தினர் திருச்சபையின் பணிகளில் தம் பங்கையுணர்ந்து செயற்படாமல் ஒதுங்கிப் போனமையால் திருச்சபை என்பது திருநிலையினர் என வகைப்படுத்தப்பட்ட துறவிகளுக்குரியது என்ற கருத்தேற்றம் பெற்றது. ஆயினும் 1962 ம் ஆண்டு திருத்தந்தை 23ஆம் ஜோண்(அருளப்பர்) தலைமையில் கூடிய இரண்டாம் வத்திக்கான் சங்கம் திருநிலையினர் போன்றே பொதுநிலையினரும் திருச்சபையின் சமபங்காளிகள் என்ற கருத்தை முன்னிறுத்தி பொதுநிலையினரை மீளத் திருச்சபையின் பணிகளில் பங்கேற்றலுக்கான முன்மொழிவுகளை முன்வைத்தது. மேலும் துறவிகளுக்கு இச்சைகளை துறந்து கற்பைப் பேணுவது எவ்வளவு முக்கியமோ அதே போல் இல்லறத்தினருக்கு தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வாழ்வைக் காப்பது கற்புப் போன்றது என்ற கருத்தையும் தெளிவுறுத்தியது.

## ஆரோக்கியமான உலக ஒழுங்கு

திருச்சபையாகட்டும், உலக இயங்குகையாகட்டும் இரு பெரும் சக்திகளாக விளங்கும் துறவிகள் (திருநிலையினர்) மற்றும் இல்லறத்தோர் (பொதுநிலையினர்) தமக்குரிய பணிகளை உரிய வகையில் ஆற்றும் போது தான் உலகு ஏற்றம் பெறும். துறவறமும், இல்லறமும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போன்றன. இந்த சமநிலை பேணப்படலே சுமுகமான உலக இயக்கத்திற்கு வழிவகுக்கும். துறவிகளுக்குரிய சில பணிகளை இல்லறத்தோர் ஆற்ற முடியாது. அதே போல் இல்லறத்தோர் நுழையக் கூடிய சில புலங்களுக்குள் துறவிகள் நுழைய முடியாது. துறவிகள் மட்டுமே கட்டுப்பாட்டுடனும், அர்ப்பணிப்புடனும், தியாக உணர்வுடனும், தூய்மையாக வாழ வேண்டும் என எம்மில் பலர் எதிர்பார்க்கின்றேன். ஆயினும் இவையனைத்தும் இல்லறத்தோருக்கும் பொருத்தம். இன்று பல்வேறு ஒழுங்கீனங்களுக்கும், சீரழிவுகளுக்கும் குடும்பங்களின் சீரின்மையே காரணம் என உணரப்பட்டுள்ளது. எனவே ஒழுக்கமான, ஒழுங்கான இல்லற வாழ்வின் அடிப்படைகள் பற்றிய புரிதல் எமக்கு அவசியமாகின்றது.

## மகிழ்ச்சியான இல்லற (குடும்ப) வாழ்வின் அடிப்படைகள்

மேலைத்தேய நாடுகளில் மட்டுமின்றி பாரம்பரியங்களுக்கும், சமூக விழுமியங்களுக்கும் முன்னுரிமை கொடுக்கும் எம் போன்ற கீழைத்தேய நாட்டவரிடையேயும் குடும்ப வாழ்க்கை சிக்கலானதாக மாறிவருவது கவலை தருகின்றது. இந்நிலையில் மகிழ்ச்சியான இல்லற வாழ்வின் அடிப்படைகளென ஆய்வாளர்கள் பின்வரும் விடயங்களை விதந்துரைக்கின்றனர்.

1. அர்ப்பணிப்பு, புரிந்துணர்வு (Commitment)
2. தொடர்பாடல். (Communication)
3. ஆன்மீக (சமய) உணர்வு (Religiosity)
4. பரஸ்பர நம்பிக்கை (Trust)
5. கருமங்களில் ஒருமித்த ஈடுபாடு (Common interest)
6. நிதி மற்றும் தொழில் தொடர்பான வரையறைகள் (Control on finance & work)
7. முன் மாதிரி நடத்தை (Role models)
8. பாலுணர்வு ஈடுபாடு (Sexual attraction)

இவற்றில் சில வழமையாக நாம் அறிந்த விடயங்களாயினும் குறிப்பாக கணவன்- மனைவிக்கிடையிலான தொடர்பாடல், இருவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரேவிதமான விடயங்களில் ஈடுபாடு கொண்டிருத்தல், வரவுக்கேற்ப செலவு செய்தல், எம் தொழில் ஈடுபாடு குடும்பத்தை துச்சமாக நினைக்க இடமளியாதிருத்தல், பிள்ளைகளுக்கும் மற்றவர்களுக்கும் முன்னுதாரணமாக இருக்க வேண்டுமென்ற உணர்வோடு வாழ்தல், எப்போதும் கணவன்- மனைவி பாலுணர்வு ரீதியான ஈடுபாட்டை ஒருவர் மீது ஒருவர் கொண்டிருத்தல் என்பன இன்றைய குடும்பங்களுக்கு மிகப் பொருத்தமானவையாகும்.

இல்லற வாழ்விற்கு சவால் தரும் விடயங்களாக அகங்காரம், சந்தேகம். துர்நடத்தை, சகிப்புத்தன்மையின்மை, பிறர் தலையீட்டிற்கு இடமளித்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இலத்திரனியல் ஊடங்களுக்கு அடிமையாகிப் போதல் என்பது போதை மற்றும் திருமணத்திற்கு அப்பாலான உறவுகளுக்கு அடிமையாகிப் போகும் நிலைக்கொப்பான குடும்பப் பிறழ்வு பிளவை ஏற்படுத்தும் காரணியாக இன்று மாறியுள்ளது.

இல்லறம் துறவறம் போன்றே புனிதமானது, அர்ப்பணிப்பு மிக்கது. துறவிகள் வாழ்வில் கடைப்பிடிக்கும் மூன்று விடயங்கள் கிருகஸ்தர்களுக்கும் பொருத்தம். கணவன் -மனைவி உறவிற்கு விசுவாசமாக இருப்பதன் மூலம் கற்பைக் காக்க வேண்டும். வரவிற்கேற்ப சிக்கனமாக செலவு செய்து தரித்திரம் பூண வேண்டும், ஒருவருக்கொருவர் மதிப்பளித்து, விட்டுக்கொடுத்து வாழ்தல் கீழ்படிவிற்கு நிகராகும். எனவே உலக இயங்குகைக்கு அச்சுறுத்தலாக மாறிவரும் இல்லற வாழ்வை நல்லறமாக்கி, குடும்பமே இக் குவலயத்தின் குதூகலம் என்னும் நிலையை உருவாக்குவோம்.

"இல்வாழ்வான் என்பவன் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை" என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப குடும்பத்தில் எம்மில் தங்கி வாழும் பெற்றோர், பிள்ளைகள், கணவன்.'.மனைவி என்னும் முப்பிரிவினரையும் தாங்கி வாழ்ந்து உலக இயங்குகைக்கு வலுச்சேர்ப்போம்.

**எப். எக்ஸ். அன்ரன்**

**S.L.P.S -1, B.A(Hons), P.G.D.E, M.A Rpl (Merit),M.Phil(phil & edu), N.Cert.in Engl.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கு-02



## அருட்பணி. அதிரியான் ஜோசப் அடிகள்

அருட்பணி.அதிரியான் ஜோசப் அடிகள் 01.09.1924 இல் யாழ். அச்சுவேலியில் பிறந்தார். திரு. பெனடிக்ற் பஸ்தியாம் பிள்ளை ஜோசப், திருமதி மாக்ரட் நேசரட்ணம் ஆகியோர் இவரது பெற்றோர் ஆவார். 9 பேர் கொண்ட குடும்பத்தில் மூத்த மகனாவார். இவர் தன் ஆரம்பக்கல்வியை கிராமப் பாடசாலையில் கற்றார். இவர்1935-1943 வரையான காலப்பகுதியில் யாழ் பத்திரிசியார் கல்லூரியில் கல்வி கற்று இக்காலப்பகுதியிலேயே யாழ். மார்டின் சிறிய குருமடத்தில் இணைந்து தனது கல்வியைத் தொடர்ந்தார். பின் அமல மரித்தியாகிகள் சபையில் இணைந்து 08.08.1946 இல் முதல் வார்த்தைப் பாட்டை கொடுத்து 08.06.1951 இல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

தனது கலைமாணி பட்டப் படிப்பை லண்டனில் முடித்து நாடு திரும்பிய இவர் 1960 இல் அருட்சகோதரர்களுக்கு இயக்குனராக பணியாற்றினார். பின் மக்கோணாவிலும் இயக்குனராக பணியாற்றி பங்குப் பணிகளுக்காக 1966 இல் கொழும்பு லூசியாஸ் பேராலயத்திற்கும், பின் நீர்கொழும்பு கடற்ககரைத் தெரு பங்கிற்கும் அனுப்பப்பட்டார். யாழ் கொழும்புத்துறையில் 1970 இல் சிறிய குருமடத்தை தாபித்த போது அதன் இயக்குனராக பணியாற்ற இவரே தெரிவுசெய்யப்பட்டார். இவரது பணியார்வம், கடின உழைப்பு, அர்ப்பணிப்பு, எளிமையான வாழ்க்கை முறை, ஒழுங்கு நிறைந்த வாழ்க்கை முறை, கடமை உணர்வு, செபவாழ்வு போன்றன குருமட மாணவர்களின் உருவாக்கத்திற்கு சிறப்பான முன்மாதிரியாக இருந்தன. இவர் குருமடத்தில் இலத்தீன், திருவிவிலிய பகுதிகள் போன்றவற்றை கற்பித்த போதும் நற்செய்தியை பரப்புவதிலும், மறைக்கல்வி கற்பிப்பதிலும் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு பயனுள்ள விதத்தில் எளிமையாக மறைக்கல்வியை கற்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் ஒரு சிறந்த குருவாக விளங்கியதோடு மட்டுமல்லாது ஓர் இசையமைப்பாளராக, பாடகராக, பாடலாசிரியராக, இசை வாத்திய கலைஞராக, மொழியியலாளராக, எழுத்தாளராக, வாசிப்பாளராக, சிந்தனையாளராக, ஆசிரியராக, மாணவராக, இயந்திரத் திருத்துனராக,தொழில்நுட்பவியலாளராக,தோட்டத்தொழிலாளியாக, விஞ்ஞானியாக, வைத்தியராக, மற்றும் தத்துவவியலாளராக விளங்கினார். இவர் ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டோர் மீது அதிக அன்பு செலுத்தினார். தமிழ், சிங்கள மொழிகளில் திருவழிபாட்டுப் பாடல்களை இயற்றினார். ''இதய வீணை'' என்னும் தலைப்பில் நத்தார் கீதங்களைப் படைத்தார். திருப்பலியில் பாடப்படும் தியானப் பாடல்களுக்கு இசைவடிவும் அமைத்தார். தம் துறவற அர்ப்பபணத்தால் இறை உறவிற்கு மாதிரி காட்டினார்.

இவர் தம் 50 வருட குருத்துவ பணி வாழ்விலே 40 வருடங்கள் குருமட மாணவர்களின் உருவாக்கப் பணியில் செலவிட்டார். இவர் ஏழைகளினதும் புறக்கணிக்கப்பட்டோரினதும் நண்பன் எனக் கூறும் அளவிற்கு தனது சேவைகளை தாராளமாகச் செய்தார். இவரது வாழ்வின் இறுதிக் காலப்பகுதியானது மிகவும் துன்பம் நிறைந்ததாக அமைந்தது. ஏனெனில் பல்வேறு உடல் நோய்களுக்கு உள்ளானார். 1995 இல் வன்னிக்கும், 2000 இல் வலிகாமத்திற்கும் இடம்பெயர வேண்டியிருந்தது. இவர் தனது துன்பவேளைகளின் போது, "கடவுள் தான் துன்பப்பட வேண்டும் என விரும்புகிறார், நான் கிறிஸ்துவோடு இணைந்து பல்வேறு ஆன்மாக்களின் மீட்புக்காக துன்பப்படுகின்றேன்." என்று கூறுவது வழக்கம். இவ்வாறாக தனது வாழ்நாளிலே மறை சாட்சியாக வாழ்ந்து கிறிஸ்துவின் எல்லையற்ற அன்பிற்கு சான்று பகிர்ந்து அர்ப்பண வாழ்வுக்கு அர்த்தம் கொடுத்து, மாசி மாதம் 17 ஆம் திகதி 2002 இல் இறை பதம் அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவியான தேவனே....

ஆவியான தேவனே அசைவாடுமே
அருட் பொழியும் ஜீவனே ஆட்கொள்ளுமே - 2
வாரும் ஆவியே தூய ஆவியே - 4
லலாலலா (ஆவி)

தெய்வீக அக்கினியே இறங்கி வாருமே
உம் திருக்கரத்தின் வல்லமையைப்
பொழிந்திடுமையா - 3

ஆன்மாவின் ஆன்மாவே அன்பின் ஆவியே
என் சுவாசமாக என்னோடு தங்கிடுமையா - 2

தூய தேவன் பேரொளியே என்னில் வாருமே
என் துணையாக என் வாழ்வில்
ஒளிர்ந்திடுமையா -2

## நானே உன் கடவுள்

நானே உன் கடவுள்
முதலும் முடிவுமாய்
நானே இருக்கின்றேன் - என் மக்களின்
துன்பங்கள் கண்டேன்
அவர் மனம் படும் வேதனை உணர்ந்தேன்
அவர் அழு குரல் நான் கேட்டேன்
நாளும் நலமும் வாழ்வும் வளமும் வழங்கி
மனமுவந்தேன்.
யாரை நான் அனுப்புவேன் - 2
எனை அனுப்பும் - 3
இதோ நானிருக்கிறேன்.

உலகம் அறியா எளியவன்
வாய்மொழி பேசா சிறியவன்
உன்துணை இருந்தால் என்னுடன் நடந்தால்
துணிவுடன் நான் செல்வேன்.
எனை அனுப்பும் - 2
இதோ நானிருக்கிறேன்.

நானே உன் கடவுள் வான் படைகளின்
இறைவனாய்
நானே இருக்கின்றேன் - என் பெயரால்
செல்பவர் யாரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் செய்தியை சொல்பவர் எவரோ
அன்பும் அறமும் நீதியும் நேர்மையும்
நிலைநிறுத்திடுவாரோ
யாரை நான் அனுப்புவேன் - 2

## அர்ப்பணம் நான் அர்ப்பணம்

அர்ப்பணம் நான் அர்ப்பணம்
உம் பதம் நான் அர்ப்பணம்
என் யேசு நாயகா உனக்காகவே
விண்ணையும் இம் மண்ணையும்
படைத்த உந்தன் கரங்களில்
அன்பின் மகிழ்வா தருவேன் அர்ப்பணம் - உன்
அன்பின் பலியாக
உன்னில் உறவாக
உன் சொல்லின் உயிராக
வாழ்வின் பொருளாக
என்றென்றும் நான் வாழவே - ஏ.ஏ.ஏ
உன்னோடு ஒன்றாகவே
உன் அன்பின் உறவாகவே II

அன்னையும் எனக்கு நீயே
தந்தையும் எனக்கு நீயே
அன்பனும் எனக்கு நீயே
நண்பனும் எனக்கு நீயே } II
சொந்தமும் நீயே
பந்தமும் நீயே - 2
எந்தன் வாழ்விலே...

அர்ப்பணம் அர்ப்பணம்
உன்னில் நானே அர்ப்பணம் } II

வாழ்வும் எனக்கு நீயே
வழியும் எனக்கு நீயே
உயிரும் எனக்கு நீயே
உறவும் எனக்கு நீயே

ஆற்றலும் நீயே
ஆறுதல் நீயே - 2
எந்தன் வாழ்விலே....ஏ
அர்ப்பணம் அர்ப்பணம்
உன்னில் நானே அர்ப்பணம் } II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் ஜீவன் தேடும்

என் ஜீவன் தேடும் தெய்வம்
என் நெஞ்சில் வரும் நேரம்
என் உள்ளம் எங்கும் பூ பூக்குதே
புது சந்தோசங்கள் எனில் தோன்றுதே } II
வாரும் தேவா வாரும்
புது வாழ்வை என்னில் தாரும்
உன் ஆசி பொங்க நான் வாழுவேன் } II

எனைத் தேற்றும் உன் வார்த்தை உயிரானது - நான்
உனக்காக உயிர் வாழ உரமாகுது } II
எனையாளும் நினைவெல்லாம் நீயல்லவா - 2
நிதம் துணையாகும் என் வாழ்வின் வரமல்லவா - 2
வாரும் தேவா...

எனைத் தாங்கும் உன் அன்பு மாறாதது
அது என் வாழ்வின் செல்வத்துள் மேலானது } II
என் சொந்தம் இனியென்றும் நீயல்லவா - 2
நிதம் என் வாழ்வின் பொருள் தேடும் உறவல்லவா - 2
வாரும் தேவா...

## நன்றி நன்றி

நன்றி நன்றி என்றும் நன்றி யேசுவே
நிதம் நன்றி கூறி நாளும் உம்மைப் போற்றுவேன் } II
என் வாழ்வின் ஒளியாக என்னில் வந்தவரே
என் உயிரின் உயிராக என்னில் கலந்தவரே
தினம் நன்றி சொல்லி எந்தன் உள்ளம் பாடுதே (நன்றி)

வார்த்தையானவரே வல்லமை தந்தவரே
உறவாய் வந்தவரே திரு உணவாய் வந்தவரே } II
நன்றி நன்றி என்றும் நன்றி யேசுவே
நிதம் நன்றி கூறி நாளும் உம்மைப் போற்றுவேன்
அன்பைத் தந்தவரே அருளைப் பொழிந்தவரே
நோய்கள் தீர்ப்பவரே மன நிம்மதி தருபவரே } II
நன்றி நன்றி என்றும் நன்றி யேசுவே
நிதம் நன்றி கூறி நாளும் உம்மை போற்றுவேன்

ஒளியாய் வந்தவரே வழியாய் நின்றவரே
வரங்கள் பொழிபவரே நிலை வாழ்வைத் தருபவரே } II
நன்றி நன்றி என்றும் நன்றி யேசுவே
நிதம் நன்றி கூறி நாளும் உம்மை போற்றுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

"ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள் ஏனெனில் அவர் நல்லவர்" (தி.பா 136:1)

"பணிக்காய் பயணிப்போம்" என்ற தொனிப்பொருளின் கீழ் 2015ஆம் ஆண்டிற்கான கிறிஸ்தவ மன்றத்தின் கருத்தாடலானது சிறப்பாக நடைபெறுவதற்கு அருளாசீரை பொழிந்த எல்லாம் வல்ல இறைவனுக்கு சிரம் பணிந்த நன்றிகள்.

கருத்தாடலுக்கு ஆசி வழங்கிய மன்னார், யாழ், மட்டுநகர் ஆயர்கள் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி, உபபீடாதிபதிகள், ஆன்மீககுரு, கிறிஸ்தவ, இந்து, இஸ்லாமிய மன்றக் காப்பாளர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

இக் கருத்தாடல் மேலும் சிறப்புற எம்மோடு கரம் கோர்த்த கல்லூரியின் பீடாதிபதி, உப பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், இணைப்பாளர்கள், ஆசிரிய கல்வியியலாளர்கள், மாணவ ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், கருத்தாடலின் அரங்குகளில் உரைகளை நிகழ்த்தியோர், நடத்துனர்கள், கலை நிகழ்வுகளை நடத்தியோர், அவற்றை நெறிப்படுத்தியவர்கள், நிதி உதவிகளை வழங்கியோர், குருக்கள், துறவிகள், பொது நிலையினர், பங்குகளிலிருந்து வருகை தந்து சிறப்பித்த குடும்பங்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகள்.

ஒலி, ஒளி அலங்கார சேவைகளை எமக்கு வழங்கியவர்கள் இம்மலரினை அழகுற அச்சிட்டுத் தந்த அகரம் அச்சகத்தினர் இக்கருத்தாடலைப் புதுப்பொழிவுடன் சிறப்பாக நிறைவேற்ற எம்மோடு உழைத்த எமது கிறிஸ்தவ மன்றத்தின் ஆன்மீகக் குரு அருட்பணி யே.லெபோண் சுதன் அ.ம.தி, பாடல்களால் எம் இரசனைக்கு விருந்தளித்தோர், இசைக்கருவிகளை மீட்டிப் பாடல்களை மெருகூட்டிய வாத்தியக்கலைஞர்கள், அனைத்து வழிகளிலும் எமக்கு உதவி நல்கிய எமது பீடாதிபதி திரு.கு.சிதம்பரநாதன், மன்றத்தின் காப்பாளர் திரு.மி.சூசைதாசன், ஆலோசகர்களான திருமதி.நெலோமி அன்ரனி குரூஸ், திரு.எஸ்.பற்றிக் ஜெராட் கிறிஸ்தவ மன்றத்தின் ஏனைய மாணவ ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது மகிழ்ச்சி நிறைந்த மனமார்ந்த நன்றிகளை சமர்ப்பிக்கின்றோம்.

**கருத்தாடல் மலர்க்குழு**
**கிறிஸ்தவ மன்றம்**
**வ.தே.க.க**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















அகரம் பிரின்டர்ஸ் - 024 2223772

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org